**R 5761** **The Two Parts of the Harvest work**

## அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள்

தேவனுடைய பிரியமான பிள்ளைகள், பட நாடகத்திற்கும் (Photo Drama) அறுவடையின் கடைசி கால ஊழியத்துக்கும் என்ன சம்பந்தம் என்று ஆச்சரியப்படுகிறார்கள். நாடகத்தைப் பற்றி ஒருவரது அறிவு அதனுடன் அவரது தொடர்போடு கட்டுப்படுத்தப்படுகிறது. சிலர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு அதைப்பற்றிய அறிவு இல்லாமல் இருக்கிறார்கள். இதை அறிமுகப்படுத்திய பிறகு வந்த அறிக்கைகள் மிகவும் திருப்திகரமாக உள்ளது. சில பகுதிகளில் வகுப்புகள் எண்ணிக்கையில் அதிகமாகி யிருக்கின்றன. சில குறிப்பிட்ட இடங்களில் நண்பர்கள் முதலில் ஏமாற்றத்தை அடைந்தனர். ஆனால் சில ஞாயிறுகளுக்கு பிறகு சத்தியம் ஜனங்களின் மனதில் அதிகமதிகமாக பதியும் போது, அநேகர் திருப்தியான உணவு கிடைக்காத அவர்களது சபையை விட்டு வெளியே வந்து நமது கூட்டங்களில் கலந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு நியதியின்படி எங்கெல்லாம் நாடகம் காண்பிக்கப்பட்டதோ அங்கெல்லாம் வகுப்புகள் அதிகமாயின. மிகவும் குறிப்பிடத்தக்க குணமுடையவர்கள் தற்கால சத்திய வெளிச்சத்துக்குள் வந்திருக்கிறார்கள். அதில் சிலர் தவறான அபிப்பிராயத்தினாலும் மூட நம்பிக்கைகளாலும் முன்னர் இருளில் இருந்த கர்த்தருடைய பிள்ளைகள்; மற்றவர்கள் உலகத்தார், இப்படியாக விநியோக வேலை மூலமாக இவர்கள் வேதாகம பாடங்களை ஆராயவும் படிக்கவும் ஆர்வமுள்ளவர்களானார்கள்.

இதேபோல, கடந்த வருடம் 4,20,000 வேதமாணவர்கள் என்ற மாதாந்திர பிரதிகள் (Bible students monthly) விநியோகிக்கப்பட்டன. ஆனால் எந்தவகையிலும் அவைகள் இலட்சக்கணக்கானோரை வகுப்புகளுக்கு கொண்டு வரவில்லை. எனினும் இது நல்ல வேலையை செய்தது; அது ஜனங்களின் மனதில் எழுச்சியை ஏற்படுத்தி, சிந்திக்கும்படி விழிப்பூட்டியது. இது சில திரள் கூட்ட வகுப்பாருக்கு சென்றடைந்தது. மற்றவர்களை நமது இலவச நூல்கள் மூலமாக முழு அர்பணிப்புக்கு நேரடியாக கொண்டு வந்தது. இந்த வேலைகள் எல்லாம் அறுவடைக் குரியவைகளாக காணப்படுகிறது; ஏனெனில் இவைகளெல்லாம் கடந்த காலத்துக்கு உரியவைகள் அல்ல.

### உழுபவன் அறுவடையாளரை முந்துகிறான்

அறுவடை வேலை அதன் முடிவுறும் வேளையில் அதிவேகமாக பெருகுகிறது. அறுவடை வேலை முழுமையாக முடிந்துவிட்டது என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது. ஏனெனில் இரண்டு வித வேலைகள் இருக்கிறது – ஒன்று கோதுமை மணிகளைச் சேர்த்தல், மற்றொன்று களைகளை அக்கினியில் சுட்டெரித்தல். கோதுமையை சேகரித்தல்

முடிந்துவிட்டது என்று நாம் நினைத்திருக்கலாம். நமது எதிர்பார்ப்புகள் உண்மையாக இருந்தால், புற ஜாதியினர் காலம் முடிவடைவதோடு யாரும் நுழைய முடியாதபடி முற்றும் ஜெயங்கொண்டவர்களின் தொகை நிறைவடைந்திருக்கும். இதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும், அனுமானம் கூடாது. அறுவடையின் பிற்பகுதி களைகளை எரிப்பதும், திரள் கூட்ட வகுப்பாரை விழிக்கச் செய்து அவர்களது விளக்குக்கு தேவையான எண்ணெயை வாங்குவதற்கு தயார்படுத்துவதுமாக இருக்கும். இந்த காரியத்தில் நாம் சரியானபடி கவனம் செலுத்தினால் இந்த நேரம், திரள் கூட்ட வகுப்பார், புத்தியில்லா கன்னிகைகள் எண்ணெயையும் வெளிச்சத்தையும் பெறுகிற நேரமாகவும், புத்தியுள்ள கன்னிகைகள் உள்ளே சென்றிருக்கிற அல்லது கல்யாணத்துக்கு சீக்கிரத்தில் உள்ளே போகிற நேரமாகவும் இருக்கும். அறுவடையாளரை உழுபவன் முந்துகிறதைப் பற்றி பேசுகிற வேத வாக்கியத்தில் அறுவடையாளர் கர்த்தராகவும் உழுபவன் மகா ஆபத்தின் காலமாகவும் இருப்பதை நாம் ஞாபகப்படுத்த வேண்டும். இந்த ஆபத்தின் காலம் அறுவடை வேலையை முந்திக் கொண்டு அதை முடிவுக்கு கொண்டு வரும். ஆனால் ஆபத்தின் காலம் போய்க்கொண்டிருக்கும். உழுபவன் உழுது கொண்டே போய்க்கொண்டிருப்பான். அதன் பிறகு அறுவடையில் நமது முயற்சிகள் முடிவுக்கு வரும். ஆனால் இந்த காலத்தில் இந்த இருண்ட இரவு வருவதற்கு முன் கர்த்தர் நம் கைகளில் கொடுத்திருக்கும் வேலைகளில் நாம் சரியாக செல்ல வேண்டும். சத்தியமானது திட்டமிடப்பட்டிருப்பது, முதற்பேறானவர்களில் தலைமை யானவர் களாகிய கிறிஸ்துவின் "மணவாட்டியை" பூரணப்படுத்துவதற்காக மாத்திரமல்ல, திரள் கூட்ட வகுப்பாரையும் அபிவிருத்தி செய்வதற்கும் அகில உலகத்திற்கு சாட்சியாக இருப்பதற்கும் ஆகும். இன்னும் சந்தர்ப்பம் இருக்கும்போது சத்திய ஊழிய கிரியைகளை நிறுத்துவதும் நமது பங்கில் எந்த ஒரு அக்கறையின்மையும் நமது மதிப்பீட்டில் ஒரு பெரும் தவறாக இருக்கும்.

### யுகங்களுக்கிடையே அர்ப்பணம் செய்தவர்கள்

இந்த சுவிசேஷ யுகத்தின் கதவு மூடப்படும்போது ஆவிக்குரிய சுபாவத்திற்கு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் இருக்காது என்பது நமது எண்ணமாக இருக்கிறது. திரும்பப் பெறும் காலத்தின் ஆரம்பத்திற்கு முன்னதாக அர்ப்பணத்தின் மூலமாக தேவனிடத்தில் வருகிற எவரும் அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவது ஆவியின் ஜீவியின் சுபாவத்திற்காக அல்ல. ஆனால் பூமிக்குரிய சுபாவத்திற்காக ஆகும். இப்படிப்பட்டவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பழைய ஏற்பாட்டு கால பாத்திரர்கள் (விசுவாசிகள்) வரும் அதே நிலைமைக்கு வருவார்கள். பழைய ஏற்பாட்டு கால விசுவாசிகள் வந்தபொழுது எந்த அழைப்பும் இன்னும் திறக்கப்படாமல் இருந்தது. பரம அழைப்பும் திறப்பட்டிருக்கவில்லை. இளைப்பாறுதலின் சந்தர்ப்பமும் திறக்கப்படவில்லை. அவர்களது அர்ப்பணம் எந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் என்பதை அறியாமலே தங்களை தேவனிடம் கொடுத்தார்கள். அவர்களுக்கு எதிர்கால வாழ்வு கிடைக்கும் என்றும் உலகத்தில் மீந்திருக்கிறவர்களைக் காட்டிலும் "மேலான உயிர்த்தெழுதலை" பெறுவார்கள் என்றும் கூறப்பட்டிருந்தது.

இப்படிப்பட்ட நிலைமையில் இவர்களைப் போல எல்லாவற்றையும் விட்டு கர்த்தரிடம் முழு அர்ப்பணம் செய்கிறவர்கள் அவர் வழியில் நடந்து விசுவாசத்துடன் உண்மையாக ஜீவிக்கிறவர்கள், இந்த சுவிசேஷயுகத்தில் முந்தி சென்றவர்களுக்கு இணையாக எண்ணப்படும் சலுகையை பெறக்கூடும் என்பது நமது எண்ணமாக இருக்கிறது. சுவிசேஷ யுகம் முடிவடைந்த பிறகும், ஆயிர வருட யுகம் ஆரம்பிப்பதற்கு முன்பும் அர்ப்பணம் செய்கிறவர்களை தேவன் ஏன் மறுக்க வேண்டும் என்பதற்கான காரணம் எதுவும் இல்லை என்று நாங்கள் அறிகிறோம்.

### களைகளை சுட்டெரித்தல்

ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவான்கள் களை வகுப்பாரை சுட்டெரிப்பதில் பங்குபெறுவார்களா என்பது தெளிவற்ற ஒரு எண்ணமாக இந்த காலக்கட்டத்தில் இருக்கிறது. "எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தும் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்." (சங் 149:9) நியாயத் தீர்ப்புகள் செலுத்தப்படும் பூமியில் ஜீவிக்கிற பரிசுத்தவான்கள், மற்றும் உயிர்த்தெழுப்பப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரும் அதில் அடங்கியிருப்பார்கள். எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பு செலுத்தப்படும் போது இங்கே ஜீவித்துக் கொண்டிருக்கிற பரிசுத்தவான்கள் எப்படி பங்கு பெறுவார்கள் என்பதை நாம் அறியவில்லை. ஆனால் இது இப்படி இருக்கும் என்ற எண்ணத்தில் எங்கள் கண்களை நாங்கள் திறந்து வைத்திருக்கிறோம்.

களைகளை சுட்டெரிப்பது தற்போது கொஞ்சம் காலம் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக காணப்படும். அதாவது தங்களை கிறிஸ்தவர்களாக வெளிப்படுத்திக் கொண்டும், தங்களை கிறிஸ்தவர்களாக நினைத்துக் கொண்டும் இருக்கின்ற சிலர், கர்த்தருடன் உண்மையான உறவுக்குள் செல்லாமலே கோதுமையாக ஆனவர்கள், களைகளாக சுட்டெரிக்கப்படவேண்டும். அவர்களது பிரதிஷ்டையைப் பற்றி கேள்வி கேட்டால், அவர்கள் "நான் பரிசுத்தவானல்ல, ஆனால் என்னால் முடிந்தவரை என்னுடைய காரியங்களில் நீதியாக நேர்மையாக இருக்க விரும்புகிறேன்" என்று கூறுவார்கள். இப்படியாக அவர்கள் உண்மையான கிறிஸ்தவனாக இருப்பது என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ளாதிருப்பதை மெய்ப்பிப்பார்கள்.

ஐரோப்பாவில் இந்த மகா யுத்தம் இதற்குமுன் சிந்தித்தேயிராதபடி ஜனங்களை சிந்திக்கும்படி எழுப்பிக் கொண்டிருக்கிறது. உண்மையான கிறிஸ்தவ தேசங்களையும் அதற்கு எதிரானவைகளையும் வேறுபடுத்திக் காண்பிப்பது இந்த காலம்தான். இதை அநேக ஜனங்கள் ஏறக்குறைய சீக்கிரத்தில் உணர்ந்து கொள்ள வருவார்கள். அதிகமான விகிதாச்சாரத்தில் களைகள் இன்னும் எரிக்கப்படாமல் இருக்கிறது. ஜெர்மனியின் சக்கரவர்த்தி வில்லியம், இங்கிலாந்தின் ராஜா ஜார்ஜ், ரஷ்யாவின் சார் மன்னர், போப் முதலானவர்கள் உண்மையான கிறிஸ்தவத்துக்கும் போலிக்கும் உள்ள வித்தியாசத்தை இன்னும் அறிந்துகொள்ள வில்லை. இதே போலவே மற்ற அநேகர் இருக்கிறார்கள். ஆனால் சுட்டெரிப்பது அதன் முடிவு வரை தொடரும். உண்மையானதும் தப்பறையானதும் எல்லாருக்கும் முழுமையாக வெளிப்படுத்தப்படும்.